# ஞானம்

## ஆசிரியர் குறிப்பு:

- பெயர் : தி. சொ. வேணுகோபாலன்.
- இவர் திருவையாற்றில் பிறந்தவர்.
- மணிப்பால் பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் பேராசிரியராகப் பணியாற்றியவர்.
- "எழுத்து" காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர்.
- இவரின் மற்றொரு கவிதைத் தொகுப்பு மீட்சி விண்ணப்பம்.

## நூல் குறிப்பு:

- தி .சொ. வேணுகோபாலனின்
- "கோடை வயல்" என்னும் தொகுப்பில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

## பாடல் வரிகள்:

சாளரத்தின் கதவுகள், சட்டம்;
காற்றுடைக்கும்,
தெருப்புழுதி வந்தொட்டும்.
கரையான் மண் வீடு கட்டும்.
அன்று துடைத்தேன்,
சாயம் அடித்தேன்,
புதுக்கொக்கி பொருத்தினேன்.
காலக்கழுதை
கட்டெறும்பான
இன்றும்
கையிலே
வாளித்தண்ணீர், சாயக்குவளை,
கந்தைத்துணி, கட்டைத் தூரிகை:
அறப்பணி ஓய்வதில்லை
ஓய்ந்திடில் உலகமில்லை!

கோடை வயல் – தொகுப்பு



## சொல்லும் பொருளும்:

- சாளரம் - ஜன்னல்
- புழுதி - மண்தூள்
- சாயம் - வர்ணம்
- தூரிகை - வண்ணம் தீட்டும் கருவி
- ஓய்வு - தளர்வு

## பாடலின் பொருள்:

- ஜன்னலில் மரப்பலகைகள் மரச்சட்டங்கள் போன்றவற்றைக் காற்றானது உடைக்கும்.
- தெருவில் உள்ள புழுதி சன்னலில் ஒட்டும்.
- அவற்றின்மீது கரையான் மண்ணால் வீடு கட்டும்.
- ஜன்னலை துடைத்து வண்ணம் அடித்தேன்.
- புதுக்கொக்கிகளால் சன்னலைச் சரிப்படுத்தினேன்.
- காலமாகிய கழுதை கட்டெறும்பான இன்றும் கையில் வாளித்தண்ணீர் சாயத்தால்நிரப்பப்பட்ட குவளை, கந்தையான துணி, கட்டையில் பொருத்தப்பட்ட தூரிகையுடன் என அறப்பணி ஓய்வில்லை.
- என்பணி ஓய்ந்து விட்டால் உலகமே இல்லை.